# திருகோணமலை கோயில் மரபில் பெண்ணடியார்கள் - ஒரு வரலாற்று நோக்கு
# Temple Girls in Trincomalee Tradition - A Historical Perspective

கிறிஸ்ரினா நிரோஜினி மோசஸ்ரூபன் / Chrisdina Nirojini Mosasrupan[1]
கௌரி லக்சுமிகாந்தன் / Gowry Luxmykanthan[2]

Date of submission: 2023-10-09
Date of acceptance: 2023-11-02
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name: Ms. Chrisdina Nirojini Mosasrupan
Email: nirojinic@esn.ac.lk

**Abstract**

Women engaging in temple service have been found since the ancient period. In the tradition of ancient temples in Trincomalee, women known as Maanikathal, and Alathi penkal are prominent. The main objective of this study is to reveal the importance of these women in temple traditions and social and cultural aspects. This research is structured as a historical methodology. There is evidence in inscriptions of the Polonnaruwa period that the Devaradiyar were well-versed in dance and were an important role in the rituals of Trincomalee temples. And also have evidence of donations being made for their work. Some remnants of the historical development of the Devaradiyar tradition, which has a long history and many specialities, can be seen in the Trincomalee temple traditions to date. Nowadays they are doing only circumambulating the Aladi and doing some temple servise. It is worth pointing out that during the Pallavar period, women called Manikkattar were appointed to nurture music and singing. However, nowadays there are doing only hand movement, which can be seen in the festivals of Trincomalee temples. They engage in service in the temples of Thirukoneswaram, Verugal and Tambalagamam. However, it is also noteworthy that these women have changed from dancing to serving as temple servants nowadays. However, it is understood to reflect the influence of the Devaradiyar system, a feature of Chola temple administration in Tamil Nadu.

**Keywords:** Maanikkathal, Sukara veddai, Aalathi girls, Kaikaatti, Trincomalee temple, Women

## அறிமுகம்

ஆரம்ப காலம் முதலாக உலகின் பல பாகங்களிலும் இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்த கலைஞர்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. புராதன சுமேரிய, பபிலோனிய நாகரிகங்களில் இத்தகைய கோயிற் சேவையாளர்கள் பற்றி அறியமுடிகின்றது. தமிழ்ச் சமூகத்தில் இறைவனுக்கு பணி செய்யும் பெண்கள் தேவரடியார், தேவதாசி எனும் பெயர்களால்

[1]The author is a Lecturer (probationary) in the Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. nirojinic@esn.ac.lk

[2]The author is a Senior Lecturer in the Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. gowryl@esn.ac.lk https://orcid.org/0009-0004-0362-4529

அழைக்கப்பட்டனர். இத்தகைய பெண்கள் நுண்கலைகளிலே குறிப்பாக நடனத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் கோயில் சம்பிரதாயங்களின் ஒரு பகுதியான இறைவன் சந்நிதியில் தமது நடனத்தை அர்ப்பணித்து வந்துள்ளனர்.

சோழர் கால தமிழகத்தில் ஆலயங்களை மையமாகக் கொண்டு தேவரடியார் முறை சிறப்பாக வளர்ச்சியடைந்த செய்திகளை கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இலங்கையிலும் இத்தகைய பெண்கள் கலைத் தொண்டாற்றியமைக்கு சான்றுகள் காணப்படுகின்றன. எனினும் கி.பி. 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளிலேற்பட்ட போர்த்துக்கேய, ஒல்லாந்துப் படையெடுப்புக்களாலும் அவர்கள் ஆட்சியில் பின்பற்றப்பட்ட சுதேசக் கலையழிப்புக் கொள்கையாலும் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள கோயில்கள் அழிக்கப்பட்டன. இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய நுண்கலைகள் இந்துக்களிடையே பெரும்பாலும் கோயிற் கலைகளாகவே நிலவிவந்துள்ளன. கோயில்கள் அழிக்கப்பட்டபோது அங்குள்ள கலைகளும் மறைந்துள்ளமையினால் இலங்கையின் கரையோர பிரதேசங்களில் போதிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை.

இலங்கையில் நீண்ட காலமாக கோயில் மரபுகளில் பெண் சேவையாளர்கள் பற்றி அறியமுடிகின்றது. கிழக்கிலங்கையில் இன்றுவரை சில புராதன கோயில்களில் சேவையாற்றும் பெண்கள் தனித்துவத்துடன் செயற்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இதில் திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரம், வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆகிய கோயில்கள் குறிப்பிடத்தக்கவையாகும். அப்பெண்கள் மாணிக்கத்தாள் என அழைக்கப்படுகின்றனர்.

## ஆய்வின் நோக்கம்

திருகோணமலையில் கோயிற் கடமைகளில் ஈடுபட்டு வருகின்ற பெண் சேவையாளர்கள் கோயில் மரபுகளிலும் சமூக, பண்பாட்டு அம்சங்களிலும் பெறுகின்ற முக்கியத்துவத்தை வெளிப்படுத்தல் ஆய்வின் முக்கிய நோக்கமாகும். கிழக்கிலங்கையில் சோழராட்சிக் கால அம்சங்கள் வரலாற்றுப் பழமை வாய்ந்த இந்து ஆலயங்கள் ஊடாக இன்றுவரை வளர்த்தெடுக்கப்பட்டுள்ளமையை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் உப நோக்கமாகும்.

## ஆய்வுப் பிரச்சினை

பெண் சேவையாளர்கள் தொடர்பான மரபுகளை தமிழ் இலக்கியங்களிலும், கோயில் மரபுகளிலும் அறியமுடிகின்றது. எனினும் இவர்கள் நடன மாதர்களா அல்லது கோயிற் பணியாளர்களா என்கின்ற இரு வேறுவிதமான கருத்து நிலையை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு கட்டமைக்கப்படுகின்றது.

## ஆய்வு முறையியல்

நேர்காணல் மற்றும் களஆய்வுகளுடாகப் பெற்றுக் கொண்ட விடயங்களை முதல்நிலைத் தரவுகளாகவும் தொல்லியற் சான்றுகள், மகாவம்சம், கோணேசர் கல்வெட்டுப் பாடல் ஆகியவற்றை துணைச் சான்றுகளாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

கோயில் மரபுகளில் பெண் சேவையாளர்கள் தொடர்பாக களவாய்வினூடாக பெறப்பட்ட செய்திகளை தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகளினூடாக ஆராய்ந்து உறுதிப்படுத்துவதற்கான வரலாற்று அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது.

பெண் சேவையாளர்கள்

கோயிலில் பணிபுரிகின்ற பணியாளர்கள் திருக்கோயில் பணியாளர்கள் என்று சிறப்புடன் அழைக்கப்படுகின்றனர். இடைக்கால தமிழ்ச் சமூக வரலாற்றில் பெண் அடியார்கள் தேவரடியார் எனப்பட்டனர். திருமால் ஆலயத்தைச் சேர்ந்த தேவரடியார்கள் எம்பெருமானடியார் என அழைக்கப்பட்டனர். விஜயநகரப் பேரரசின் காலத்திலேயே, மேற்குறித்த பெயர்கள் அனைத்தும் வழக்கொழிந்து போய் 'தேவதாசிகள்– என்ற பெயர் நிலைபெற்றது.

கேரளப் பிராந்தியத்தில் தேவிடிக்கள், நங்கைமார், குடிக்காரிகள், முறைக்காரிகள் எனவும், கர்நாடகப் பிராந்தியத்தில் பொட்டி, ஜோக்தி எனவும் ஆந்திரப் பிராந்தியத்தில் ஸானிகள் எனவும் ஒரிஸ்ஸா பிராந்தியத்தில் பாத்ராக்கள் மற்றும் மாகாரிகள் எனவும் அஸ்ஸாம் பகுதியில் குர்மபுக்கள், குடிபுக்கள் எனவும் இப்பெண்கள்; அழைக்கப்பட்டனர். இந்துமதப் பண்பாட்டில் மாத்திரமன்றி பௌத்தம், சமணம் ஆகிய மதங்களின் பண்பாட்டுத் தளங்களிலும் பெண்சேவையாளர் முறைமை நிலவியது. எனவே இந்தியாவின் பல பகுதிகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தமையைக் காணமுடிகின்றது.

இது இந்துக் கோயில்களில் ஆன்மீக சேவையில் அர்ப்பணிக்கப்பட்ட அல்லது ஈடுபட்ட நடனப் பெண்களைக் குறிக்கிறது. பிற்காலங்களில் பொதுப் பயன்பாட்டு பணிகளிலும் தேவரடியார்கள் ஈடுபட்டனர். தேவதாசிகள் எல்லா நேரங்களிலும் கடவுளுக்கு சேவை செய்ததால் அவர்கள் தேவரடியார் என்றும், நடனத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருந்ததால் கணிகையர் என்றும், சிவாலயங்களில் சேவை செய்வதற்கு விசேஷமாக அர்ப்பணிக்கப்பட்டவர்களாதலால் ரிஷபத்தாளியர் என்றும், திருக்கோயில் சார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்த பெண்டிர் தளிர்சேரி பெண்கள் என்றும், யாரையும் மணம் புரியாமல் வாழ்ந்தவர்கள் பதியிலார் என்றும், சிவன் கோயிலுக்கு நேர்ந்து விடப்பட்டவர்கள் உருத்திர கணிகையர் என்றும், ஆலயத் தொழும்புப் பணிகளில் ஈடுபட்டவர்கள் மாணிக்கத்தார் என்றும் காவிரிப்பிணை, ராஜதாசிகள், தளியிலார், வழியிலார், கோயில் பிணாக்கள், தலைக்கோலிகள் எனவும் அழைக்கப்பட்டனர் (சதாசிவபண்டாரத்தார், 477). இவர்கள் பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அனைவரும் ஒரு வகுப்பினராவர் (சிவசாமி, 2006, ப.284).

தேவதாசி முறையின் தோற்றத்தை பல்லவர் மற்றும் ஆரம்பகால பாண்டியர் காலங்களில் காணலாம். இசையும் கூத்தும் வளர்க்க கணிகையர், அடிகள்மார், மாணிக்கத்தார் முதலிய பெண்கள் நியமிக்கப்பட்டனர் (இராசமாணிக்கனார், 2013, ப.280). ஆயினும் சோழர்கள் தேவதாசி அமைப்புமுறையை பெரும் முக்கியத்துவமுடையதாக மாற்றினர். தேவதாசிகள் பல்வேறு வடிவங்களில் கோயில்களில் இணைக்கப்பட்டனர். இவர்கள் அன்றாடம் கோயிலில் உள்ள பணிகளை செம்மையுடன் அர்ப்பணிப்பு உணர்வுடனும் மேற்கொண்டனர். இவர்களது பணிகளாக கோயில்களில் அலகிடுதல், அரிசியை தூய்மையாக்குதல், மெழுகிடுதல், மலர் தொடுத்தல், தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் போன்ற பிரபந்தங்களை இசையுடன் ஓதுதல் நடனமாடுதல் முதலானவையாகும். தேவரடியார் தாமே விரும்பி இப்பணியை ஏற்றுக் கொண்டனர். சிலர் அவர்களது குடும்பத்தாரால் விரும்பியோ விரும்பாமலோ கோயிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டார்கள். சில அர்ப்பணிப்புள்ள வேலையாட்கள் திருமணம் செய்யாமல் கோவிற் பணிகளில் ஈடுபட்டனர். ஒரு சில தேவதாசிகளின் தோள்களில் சூலா அல்லது ரிஷபாவின் முத்திரை குத்தப்பட்டது.

மன்னன் இறைவனின் மனிதப் பிரதிநிதி என்பதால் தேவதாசிகள் பிற்காலத்தில் அரசவையிலும் ஆடல் மகளிராயினர் எனக் கூறப்படுகின்றது (சிவசாமி, 2006, ப.285). ஆரம்ப காலத்தில் உயர் குலத்தை சேர்ந்த பெண்கள் (கைக்கோளர் சமூகம் மற்றும் முதலியார்) இதில் இணைக்கப்பட்டனர். பின்பு அனைத்து சாதியினரும் இப்பணியில் ஈடுபட்டனர். இராஜராஜ சோழன் காலத்தில் தேவதாசி அமைப்பு உயர் நிலையை அடைந்தது. முதலாம் இராஜராஜ சோழனின் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டில், கோயிலின் சேவைக்காக நானூறு நடனப் பெண்களை நாட்டிலுள்ள மற்ற கோயில்களில் இருந்து வரவழைத்து அவர்களுக்கு நிலம், குடியிருப்பு வசதிகளை வழங்கியமை பற்றிய குறிப்புண்டு (பிள்ளை, 2002, ப.336). முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் திருவாரூர் கோயிலில் பணி செய்த தேவரடியார் பற்றிய குறிப்புண்டு. இரண்டாம் இராஜாதிராஜ சோழன்

காலத்தில் ஒருவர் எழுநூறு காசுகளுக்கு நான்கு பெண்களை வாங்கி திருவாலங்காடு கோவிலுக்கு அர்ப்பணித்தார் என அக்கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

சமயம் சார்ந்த அல்லது சமுதாயம் சார்ந்த மங்களகரமான எந்த விழாவிலும் அவளுக்கு முதலிடம் வழங்கப்படும். தமிழ் நாட்டில் உள்ள ஒரு கல்வெட்டிலே ஒரு தேவதாசிக்கு 'மன்னரை முடிசூடும் பெருமாள்" என்ற அடைமொழி வழங்கிப் பாரட்டப்படுகின்றது. 'தேவதாசியைக் கண்ணாலே பார்ப்பது புண்ணியச் செயல்" என இலிங்க புராணம் கூறும். அவள் நற்சகுனமாகவும் கருதப்பட்டாள். ஒரு தேவதாசி இறந்துவிட்டால் மூலமூர்த்தியின் ஆடை கொண்டு வரப்பட்டு அவள் உடலின் மீது போர்த்தப்படும். இந்த வழக்கம் இவர்களின் பணிகள் இடம்பெறும் கோவில்கள் அனைத்திலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

## இலங்கையில் தேவரடியார்

இந்தியாவிற் போன்று இலங்கைக் கோயில்களிலும் தேவதாசிகள் இருந்தனர். குறிப்பாகச் சோழப் பேரரசின் ஆதிக்கம் இலங்கையிலேற்பட்டிருந்த காலத்தில் தேவதாசிகள் பொலநறுவையிற் சோழர் அமைத்த வானவன்மாதேவி ஈஸ்வரத்திலும், விஜயராஜ ஈஸ்வரத்திலும் இறைபணி செய்தனர். பொலனறுவை, தெவிநுவர போன்ற இடங்களில் இருந்த சைவ, வைணவக் கோயில்களில் தேவரடியார் இருந்து இசை, நடனப் பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. பொலன்னறுவை வானவன்மாதேவீஸ்வரத்து மூலஸ்தான புறச்சுவரில் எழுதப்பட்ட அதிராஜேந்திர தேவனின் கல்வெட்டு ஒன்றில் மன்னனது மூன்றாவது ஆண்டில் வழங்கிய நன்கொடை, அது சார்ந்த அறக்கட்டளையினை குறிப்பிடுகின்றது. சோழமண்டலத்து மங்கலப்பாடி வேளாண் கங்கை கொண்ட சோழ பல்லவராயன் என்பவன் நந்தா விளக்கு ஒன்றினை எரிப்பதற்கென்று ஐந்து காசினை வழங்கினான். இதனை ஒப்புக்கொண்டு விளக்கெரிப்பதற்காக கோயிலுடன் தொடர்புடைய பல பிரிவினர் பொறுப்பேற்றனர். இவ்வரிசையில் தேவரடியார் என்போரை பற்றியும் குறிப்பிடுகின்றது. அறக்கட்டளை ஒன்றுக்கு கோயிலோடு தொடர்புடைய எல்லா சமூகத்தினரும் பொறுப்பேற்றமை புலப்படுகின்றது (பத்மநாதன், 2006, ப.78).

கி.பி. 1344 இல் இலங்கைக்கு வந்த மொறோக்கோ நாட்டுப் பயணியான இபின்பட்டுதாவின் பயணக்குறிப்புகளில் தெவிநுவரவில் இருந்த பெரிய விஷ்ணு ஆலயத்தில் இறைவன் திருமுன் குறிப்பிட்ட கிரியைகளின் போது ஆடுவதற்கும் பாடுவதற்கும் 500 மாதர் (தேவரடியார்) இருந்தமை அறியப்படுகின்றது (சிவசாமி, 2001, ப. 67 68). கி.பி. 14ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் சிங்களத்தில் எழுதப்பட்ட சந்தேசய தூதுப் பிரபந்தங்களில் அரசசபையிலும் இந்துத் தெய்வங்களின் முன்பும் இடம்பெற்று வந்த நடனம் பற்றிய வருணனைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் தேவரடியார்கள் சமயப்பணிகளிலும், கலைப்பணிகளிலும் ஈடுபட்டிருந்ததை வையாபாடல், கைலாயமாலை மூலம் அறியலாம். வையாபாடலில் 'நச்சுவிளி நாட்டியஞ் செய்வோர்கள் ' (60), 'ஆடு மாதர்கள் வலம் வர ' (86), 'கறுவு மனக் கணிகையர்' (95), எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (நடராசா, 1980, ப.4856). கைலாய மாலையில் 'பங்கமுடன் நாடகத்தின் மாதர் நடிக்க' (260), (கை.மா, ப.19) என்ற குறிப்பு எடுத்துக்காட்டாகும். கோணேசர் கல்வெட்டில் '...அத்தர் முன்னர் ஆலாத்தி நடனமிடல்' (6), 'செய்ய நடனஸ்திரிக்கு முட்டுவகை கொட்டலோடு சிறக்கப் பாடல்' (9) தேவரடியார் சிறப்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (கோ.கல், ப.54,56). கி.பி 15ஆம் நூற்றாண்டளவிலே கோட்டை அரசிலிருந்த இந்துக் கோவில்களில் நடனமும் இடம் பெற்றதாக அறியப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலே கனகி எனும் நடனமாது இருந்தாள் (சிவசாமி, 2006, ப.288).

### கிழக்கிலங்கையின் கோயில் மரபில் பெண் சேவையாளர்கள்

சோழர்களது ஆட்சி இலங்கையில் நிலைபெற்ற காலத்தில் கிழக்கிலங்கை குறிப்பாக திருகோணமலை அவர்களின் படையரண்களில் ஒன்றாகக் காணப்பட்டது. பொலநறுவை போன்று இங்கும் பல இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டதுடன், புனர்நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு அவர்களால் பரிபாலிக்கப்பட்ட கோயில்களில் கோயிற் பணிகளுக்கென தேவரடியார் நியமிக்கப்பட்டிருந்தமைக்குச் சான்றுள்ளன. சோழருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஸ்ரீ விஜயபாகு மன்னனது 42ஆவது ஆட்சியாண்டில் கந்தளாயான விஜயராஜ சதுர்வேதிமங்கலத்து தென்கைலாசமான ஸ்ரீ விஜயராஜேஸ்வரம் எனும் சிவாலயத்தில் பிராமணனான காராம்பிச் செட்டு யக்ஞக்ரமவித்தன் என்பவனின் மனைவியான நங்கைசானி தனது கணவனின் மறைவிற்குப் பின்னர், அவனின் நினைவாக பல தானங்களை வழங்கினாள். அதில் ஒன்று தேவரடியாருக்கு வழங்கப்பட்ட கொடையாகும். அதாவது ஏழு தேவரடியாரை தலை இலட்சனையிட்டு பராமரிப்பதற்கு என்று 23 காசுகளை கோயிலுக்கு தானமாக வழங்கினாள் என்ற செய்தியை பளமோட்டைச் சாசனம் குறிப்பிடுகின்றது (Paranavitana, 1994, pp.191-*196*). *'.... தேவரடியாராகப் பெண்டுகள் எழுவரைத் தலை இலச்சனை யிட்டு இவர்களுக்கு நிலை பொலியூட்டடு நிப3ந்தமாக இட்ட காசு 23......' (பத்மநாதன், 2006, ப.417).*

அக்காலத்தில் பொதுவாக சிவன் கோவிலில் பணிசெய்யும் தேவரடியார்களுக்கு சூல இலச்சனையும், வைணவக் கோயில்களில் இறைப்பணியாற்றும் தேவரடியார்களுக்குச் சக்கர இலச்சினையையும் பச்சைகுத்துவது கோவில் மரபாகும். முதலாம் குலோத்துங்கனின் 49 ஆம் ஆட்சியாண்டில் இருமுடி சோழ தெரிந்த வில்லிகள் என்ற படைத்தலைவன் கணபதி நம்பியாகிய அழகிய பாண்டிய பல்லவரையன் என்பவன் தன் குடும்ப பெண்கள் சிலரை சூல இலச்சனையிட்டு திருவல்லங் கோயிலில் தேவரடியராக பணி செய்ய விட்டான் என்பது வரலாறு. இலங்கையிலும் இம்முறை நிலவியுள்ளமையை அறிய முடிகின்றது. அத்துடன் அவர்களுக்கு செலவிற்காகவும் தானம் வழங்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

நாட்டியக் கலை பயின்ற முப்பத்தியிரண்டு பேரை திருக்கோணேஸ்வர கோயில் உபசாரம் செய்ய நியமித்து அவர்களுக்குரிய நிலமானியத்தை பொலநறுவை அரசன் கஜபாகு மன்னன் (கி. .பி. *11321153)* வழங்கினான் என்ற செய்தி கோணேசர் கல்வெட்டுப் பாடலில்,

*'...நாட்டியக் கயிலை நற்றொழும் பினுக்கு*

*மூட்டிய தலைமை முப்பத் திரண்டினர்க்கும்*

*ஈட்டிய நிலம் புலம் யார்க்கு மளித்து'*

*(கோ.கல்:100)*

*எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*'செம்பித்துரை மகள் அன்னம்மை அவள் மகள் மருதாத்தை*

*சிதம்பரத்துரை மகள் கோணாத்தை அவள் மகள் கயிலம்மை*

*பாலகத்துரை மகள் கதிராசி அவள் மகள் செம்பாத்தை*

*தீர்த்தன் மகள் புவனபிள்ளை அவள் மகள் உமையாத்தை*

*சிவனார் கணக்கள் மகள் பாலாத்தை அவள் மகள் கோணாத்தை*

*காக்கைத்துரைமகள் வேதம்மை, அவள்மகள் வள்ளியம்மை*

*திருவுடையாள் அவள் மகள் கருக்கு நாயகம்பிள்ளை சுந்தரியார்'*

*(கோ.கல்:100)*

இன்றுவரை திருகோணமலையின் பிரசித்தி பெற்ற ஆலயங்களின் நடைமுறைகளில் மாணிக்கத்தாள் என்போர் முக்கியம் பெற்றுள்ளனர். மாணிக்கம் எனும் பெயர் தேவரடியார்களுக்குப் பெருமை சேர்க்கும் பெயரெனவும், அவர்கள் உண்மையிலேயே

விலைமதிப்பற்ற மாணிக்கங்கள் எனவும் இசைப்பேரறிஞர் பி.எம். சுந்தரம் கூறியுள்ளார் (சிவசாமி, 2006, ப.284). நடனமாதுக்கள் என்ற முறையிலிருந்து மாற்றமுற்று ஆலயப் பணிகளில் ஈடுபடுபவர்களாக இன்றும் தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரர் ஆலயம், திருக்கோணேஸ்வரர் ஆலயம், வெருகல் சித்திர வேலாயுதர் கோயில் என்பவற்றில் உள்ளனர்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத் திருவிழாவின் போது தம்பலகாமத்து தேவரடியார் (மாணிக்கத்தாள்) மரபைச் சேர்ந்த பெண்களின் பங்களிப்பு முக்கியமானது. ஆரம்ப காலத்தில் கோணேஸ்வரக் கல்வெட்டுப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று கோயில் பணிகளில் ஈடுபட்ட இவர்கள் இன்று காலவோட்டத்தில் ஆலயத்தை துப்பரவு செய்தல், ஆலாத்தி காட்டுதல் போன்ற பணிகளை மட்டும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்ப காலங்களில் கோவிலில் நடைபெறும் காலசந்தி, உச்சிக் கால பூசைகளின் போது தேவதாசி குறிப்பிட்ட நடனங்களை இறைவன் திருமுன் ஆட வேண்டும், ஆடல், பாடல் தெரியாதவர்கள் பூத்தொடுத்தல், பூசைப்பாத்திரம் துலக்குதல் போன்ற சிறு வேலைககளைச் செய்திருப்பர் எனலாம். இறைவனுக்கு கண்ணூறு (திருஷ்டி தோஷம்) கழிக்கும் உரிமை தேவரடியாரிடம் விடப்பட்டிருந்தது. கும்ப ஆராத்தி அல்லது குடமுறையின் அடிப்படைக் கருத்து இதுவாகும். உற்சவமூர்த்தி கோவிலின் நான்கு வீதிகளிலும் உலா சென்று, திரும்பவும் இருந்த இடத்திற்கு வரும் போது தேவதாசி கும்ப ஆலாத்தி எடுப்பாள். இக்குட முறை தேவதாசியின் கௌரவ உரிமையாகும்.

கோணேசர் ஆலயத்தில் ஆலாத்தி எடுப்பதற்காக குளகோட்ட மன்னனால் நியமிக்கப்பட்ட தொழும்பாளர்களான ஆலாத்திப் பெண்கள் மருங்கூரிலிருந்து அழைத்துவரப்பட்ட தானத்தார் குடியைச் சேர்ந்தவர்கள். *'ஆலாத்தி நடனமிடல் பன்றிகுற்றல் அதிகபட்ச அரனுக்கீதல் இத்தனையும் தானத்தார் செய்வீரென்ன"* என கோணேசர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது *(வடிவேல், 1983, ப.54).* ஆலாத்தி தொழும்புக்காக ஏழு பெண்கள் நியமிக்கப்பட்டனர். பிற்காலத்தில் கோணைநாதருக்கு திருக்குளக்கட்டில் மூன்று வருடம் பூசை செய்த காலத்தில் இரண்டு ஆலாத்திப் பெண்கள் இல்லாது போனபடியால் வன்னிபமும் இருபாகை முதன்மையும் சேர்ந்து ஏழு ஆலத்திப் பெண்களை குடிபிரித்து ஆலாத்தி எடுப்பதற்காக நியமித்தனர் அவ்வேழு ஆலாத்தி பெண்களின் குடிகள் மேல்வருமாறு:

*1. செம்பித்துரை மகள் அன்னம்மை அவள் மகள் மருதாத்தை*

*2. சிதம்பரத்துரை மகள் கோனாத்தை அவள் மகள் கயிலம்மை*

*3. பாலகத்துரை மகள் கதிராசி அவள் மகள் செம்பரத்தை*

*திருகயிலைநாயகரை திருக்குளக்கட்டில் மூன்று வருஷம் பூசை செய்த நாளில் இரண்டு ஆலாத்திப் பெண்கள் இல்லாது போனபடியால் வன்னிபம் ஏழு ஆலாத்திப் பெண்களை குடிபிரித்து அவர்கள் குடியிற் காலற்றுப்போனால் அவரவர்கள் தேடிய காணி உடைமை யாவற்றையும் கொடுத்து ஆலாத்தி நடப்பிக்க வேண்டும். இதனை நடப்பியாதிருந்தால் அரசருக்கும் சிவாலயத்தை நடப்பிப்பவருக்கும் ஊருக்குமாகாது* என கோணேசர் கல்வெட்டுப் பாடலில் குறிப்பிடப்படுகின்றது *(கோ.கல், 1993, 134,135).*

தானத்தார் வகைப்பாட்டுக்குள் வருகின்ற முப்பது குடிகளுள் தேவரடியார்களும் காணப்பட்டுள்ளனர். இந்த நடனஸ்திரிகளுக்கு உதவும் வகையில் வாத்தியம் இசைத்தல், வாய்ப்பாடு பாடுதல் என்பவற்றுக்காக இரண்டாவது குடியேற்றத்தின் போது சிலர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. திருக்கோணேஸ்வர ஆலய மாணிக்கத்தாளின் வாழ்வாதாரத்துக்காக சில ஏற்பாடுகளை கஜபாகு மன்னன் செய்தான் என கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்றது. *'புவிபுகழ் பொன்னவராயன் கொடுத்தது நாகரத்தின மாணிக்கம் தம்பிரானேற்றுக்*

கொண்டது. செகமது புகழுஞ் சிதம்பரராயன் கொடுத்தது நவரத்தின மாணிக்கம். இராசர் ஏற்றுக்கொண்டது. கருணைங்கடலான் காளிங்கராயன் கொடுத்தது கனகரத்தின மாணிக்கம். வன்னிமையேற்றுக் கொண்டது. மதப்புலியென்னும் மகாகொம்பரராயன் கொடுத்தது. மரகதரத்தின மாணிக்கம். காராளரேற்றுக் கொண்டது. சித்தசனிகர்க்குந் தென்னவராயன் கொடுத்தது வயிரரத்தின மாணிக்கம் மீகாமனேற்றுக்கொண்டது. திருவுறைமார்பன் செம்பகராயன் கொடுத்தது பளிங்குரத்தின மாணிக்கம். கம்மாளரேற்றுக்கொண்டது' (வடிவேல், 1983, ப.102).

இதனூடாக பெண்ணடியார்கள் மாணிக்கத்தார் என அழைக்கப்பட்டதுடன் இவர்களுக்கான பராமரிப்புச் செலவுகளை கோயில் நிர்வாகம் ஏற்காது தனித்தனியாக வெவ்வேறு சமூகப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 'கோணேசர் கோயிற்கடமை புரிவதற்கென்று சிலபேரை திட்டம் பண்ணியமை பற்றிச் கூறப்படுகின்ற பகுதியில் அவர்களின் இயற்பெயர்களன்றி விருதுப் பெயர்களே காணப்படுகின்றது. மாணிக்கம் என்பது அவர்களது பட்டப்பெயர்களாகும். மாணிக்கம் என்பது தேவரடியார் அனைவருக்குமுரிய பட்டம் என்பது பொலன்னறுவையிலுள்ள வானவன்மாதேவீஸ்வரத்துச் சாசனம்; ஒன்றினால் அறியப்படுகின்றது.' என்பது பேராசிரியர் பத்மநாதனின் கருத்தாகும் (பத்மநாதன், 2022, ப.71). எனவே மாணிக்கம் என்னும் பட்டத்தை கோணேசர் கோயிலில் கடமைபுரிந்த தேவரடியாருக்கும் வழங்குவது வழமை என்பது இதன் மூலம் உணரப்படுகின்றது.

தேவரடியாரை நியமிப்பது தானத்தாரின் பொறுப்பாகும். தானத்தார் குளக்கோட்டனிடமிருந்து இராயர் பட்டம் பெற்றவர்கள் என்பது ஐதிகம். கோயிலுக்கு கடமை செய்வதற்கென்று தானத்தார் வழங்கிய மாணிக்கங்களை இராசர்- வன்னிமை, காராளர்- மீகாமன், கம்மாளர்- தம்பிரான் முதலானோர் ஒப்புக் கொண்டனர். அவர்களுக்கு வேண்டிய நில புலன்களையும் ஆளணிகளையும் உடுபுடவைகளையும் கொடுத்து அவர்களை ஆதரிப்பது அவர்களின் கடமையாகும்.

## தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரம்

போர்த்துக்கேயரின் கோயில் அழிப்புக் கொள்கையால் கோணேஸ்வர பெருமானின் உருவச்சிலைகள் தம்பலகாமத்திற்கு கொண்டுவரப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. அங்கு பின்பற்றப்பட்ட மரபுகள் இங்கு பின்பற்றப்படலாயின. அந்தவரிசையில் குளக்கோட்டன் காலத்திற்குரிய செய்தியாக கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொழும்புப் பணிகள் தம்பலகாம ஆதி கோணேஸ்வர கோயிலில் பரம்பரையாகப் பேணப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இங்கு கடமை செய்யும் பெண்கள் 'மாணிக்கத்தாள்" என அழைக்கப்படுகின்றனர். தமிழகத்தில் திருவல்லம் சிவன் கோயிலில் காணப்படுகின்ற மூன்றாம் நந்திவர்மன் கால மாறம்பாவையாரது கல்வெட்டில், திருக்கோவில் பணி செய்யும் 'மாணிகள் ஐவர்" என்பது கூறப்படுகின்றது. மாணிகள் தளிப் பரிவாரத்தில் சேர்ந்தவர் எனவும் அவர்கள் கோயிலை அடுத்திருந்த மடத்தில் சாத்திரங்களைக் கற்று வந்தவராகலாம் என இராசமாணிக்கனார் கருதுகின்றார் (1999, ப.88).

தற்காலத்தில் மாணிக்கத்தார் என்போர் தினசரிப் பூசைகளின் போது எவ்வித கடமைகளிலும் ஈடுபடுவதில்லை. திருவிழா உற்சவ காலங்களின் போதே அவர்கள் பணிகளை மேற்கொள்கின்றனர். சித்திரை மாதம் இடம்பெறும் கோணேசர் கோயில் திருவிழாவிலும் ஆனி மாதம் இடம்பெறும் தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் ஆலய உற்சவத்திலும் இறைவனுக்குத் தூபம் காட்டுவது இவர்களது கடமையாகும். ஏனெனில் திருகோணமலை கோணேசர் ஆலயத்திற்கென தனியாக நியமிக்கப்பட்ட மாணிக்கத்தாள் காணப்படவில்லை. தம்பலகாமத்தைச் சேர்ந்த பெண்களே திருவிழாக் காலங்களில் அங்கு

பணி புரிகின்றனர். கோணேஸ்வரப் பகுதிகளிலிருந்து அவர்கள் காலப்போக்கில் இடம்பெயர்ந்து தம்பலகாமத்தில் குடியேறியுள்ளனர் எனக் கருதலாம்.

தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் ஆலய உற்சவத்தின்; போது கூட்டுதல், துப்பரவாக்கல் போன்ற தொழும்புகளுடன் ஆலாத்தி எடுத்தல், கை காட்டியாகச் செயற்படல் போன்றவற்றிலும் இவர்கள் ஈடுபடுவர். திருவிழாவின் 13ஆம் நாளன்று கோணேஸ்வரப் பெருமான் உள்வீதிக்குப் புறப்படுவார். அப்போது மாணிக்கத்தாள; ஆலாத்தி எடுப்பதுடன் சுவாமி வசந்த மண்டபத்திற்குச் செல்லும் வரை கைகாட்டியாகச் செல்வார். அதேபோன்று 14ஆம் நாளன்று கதிர்காமசுவாமிக்கும், 16ஆம் நாளன்று சுப்பிரமணியருக்கும் முறையே கைகாட்டி, ஆலாத்தி எடுத்து அழைத்துச் செல்வர். இவ்வாறு செல்லுகின்ற போது 'தந்தனத்தான்' எனத் தொடங்கும் பாடலை வைராவியார் பாடுவார். வரவேற்புப் பாடலுக்கு ஒப்பான இப்பாடலின் இசையில் விறுவிறுப்புத் தன்மை காணப்படும். இதன்போது மாணிக்கத்தாள் நடனத்திற்குரிய சில அசைவுகளைச் செய்வர். அதாவது சந்திகளில் நின்று பூமியைத் தொட்டு வணக்கம் செலுத்திய பின் இடது கால் மற்றும் வலது கையை நெஞ்சுக்கு நேராக நீட்டி ஒருவாறு அசைவு காட்டும் முறை பின்பற்றப்படுகின்றது (படம் 01). எனினும் கை தவிர வெறெந்த பாகங்களிலும் அசைவிற்கான பிரதிபலிப்பு காணப்படாது. நாட்டியத்தில் பூமாதேவிக்கு வணக்கம் செய்வது முதற்படிநிலையாகும். மாணிக்கத்தாள் இதனைச் செய்கின்றபோதிலும் முழு உடலசைவினூடாக நடனம் ஆடாது கையசைவில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றனர். ஆரம்ப காலத்தில் தேவரடியார் ஆடிய நடனங்களின் அசைவுகள் காலப்போக்கில் மருவி தற்காலத்தில் இவ்வாறான அசைவுகளாக மட்டும் நிலைபெற்றுள்ளது எனக் கருத முடிகின்றது.

வரவேற்புப் பாடல் ஒவ்வொரு சந்திக்கும் உண்டு. இதனை சந்திப் பாடல்கள் என்று அழைக்கின்றனர். ஆலாத்தி காட்டும் மாணிக்கத்தாள் தலைப்பாகை அணிவது கட்டாயமானதாகும் (படம் 02). இப்பணிக்கு ஒரே குடும்பத்தில் பிறந்த அனைத்து பெண்களும் ஈடுபடுவதில்லை. தாய் வழியில் குடும்பத்தில் மூத்த பெண்ணுக்கு இவ்வுரிமை வழங்கப்பட்டு வருகின்றது. ஆலாத்தி எடுக்கும் போது ஆலாத்திப் பாடல் பாடப்படுகின்றது.

இறைவன் முன் நர்த்தனம் செய்யும் பெண்கள் தம்பலகாமம் எட்டுச் சந்திகளில் எட்டுவகையான நடனங்களை ஆரம்ப காலத்தில் ஆடி இருக்கிறார்கள். ஆனால் இன்று கோயில் விழாக்களில் தேவதாசிகளின் எட்டுவிதமான நடனங்கள் குறியீடாக வெறும் சைகைகளாக காட்டப்படுகின்றன. திருஞானசம்பந்தர் கோணேஸ்வரம் மீது பாடிய பதிகப் பாடலை பண்ணிசைத்துப் பாட மாணிக்கம் என வந்த பெண்தொழும்பாளர் அபிநயம் பிடிப்பது போல் பாவனை செய்வார். மேலும் பூபாலகோத்திர வன்னியனார் தம்பலகாமம் கோணேசர் ஆலயத்திற்கு வந்தபோது மேளதாள இசைக்கருவிகளுடன் பெண்கள் நடனமாடி வரவேற்றதை கொடிக்கம்பர் சுவரில் சித்திரமாக வரையப்பட்டிருந்தது. தம்பலகாமத்தில் தேவதாசிகள் தொழும்பாளர்களாகவே வாழ்ந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (சரவணபவன், 2014, ப.136).

இன்றும் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் இத்தொழும்பு செய்வதற்கு ஒரு பெண் தொழும்பாளரே காணப்படுகின்றார். இவர் நர்த்தனம் செய்வதில்லை. இதற்குப் பதிலாக கைகாட்டி தொழும்பை செய்து வருகின்றார். இறைவனுக்கு வசந்த மண;டபப் பூசை இடம்பெறும் போதும், திருவிழாச் சுற்றும்போதும் சந்திகளில் கைகாட்டும் தொழும்பைச் செய்வார். இவரே தற்போது இறைவனுக்கு ஆலாத்தி தொழும்பையும் செய்து வருகின்றார். முன்னர் ஆலாத்தித் தொழும்புக்கென வேறு பெண்களை நியமித்தமை கோணேசர் கல்வெட்டில் வருகின்றது. தற்போது மாணிக்கம் தொழும்பை காரியப்பரின் (தானத்தார் குடி)

மகள் செய்து வருகின்றார்.

வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோயில்

வெருகல் கோயில் திருவிழாவின்; போது பெண்ணடியார்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அங்கு மாணிக்கத்தாள், ஆலாத்திப் பெண்கள் என இரு வேறு பிரிவினர் காணப்படுகின்றனர். திருவிழாவின் ஒன்பதாம் நாளன்று முதன்முறையாக சிவன், பிள்ளையார், முருகன் ஆகியோருடன் சித்திரவேலாயுத சுவாமி கேடயத்துள் எழுந்தருளி அவர்களின் நடுவில் உள்ளவாறு உள்வீதி, வெளிவீதி இரண்டிலும் வலம் வருவார். வெளி வீதியில் வரும் போது ஈசான மூலையில் விசேட பட்டுச் சாத்தப்பட்டுத் தேவார பாராயணம் நடைபெறும். பின் கோயில் முன்றலில் வைத்து ஆலாத்திப் பெண்களுக்குச் சேலை வழங்கப்படும். அதை அவர்கள் அணிந்து வந்ததும் நீர், பன்னீர் என்பவற்றைத் தெளித்து அவர்களைத் தூய்மைப்படுத்தி விபூதி பூசுவர். அதன் பின்னர் அவர்கள் கடவுளர்க்கு ஆலாத்தி எடுப்பர்.

இங்கு படையலுக்குத் தேவையான நெல் முதலான தானியங்களைக் குற்றி மாவிடித்துக் கொடுக்கும் பெண்களை மாணிக்கத்தாள் என்பர். ஆலாத்திப் பெண்கள் என்போர் விழாக் காலங்களில் சுவாமி வீதியுலா வரும் போது தீபாராதனை செய்வோராவர். அவர்களில் இரு வகையினர் உள்ளனர். வள்ளியம்மையாருக்கு ஆலாத்தி எடுக்கும் பெண்கள் வேடர் குலப் பெண்களாக இருக்க, தெய்வானை அம்மையாருக்கு ஆலாத்தி எடுக்கும் பெண்கள் வேளாளரின் வவுணியன் குடியைச் சேர்ந்தவர்களாக இருப்பர் (கௌரி, 2012, ப.7879).

உற்சவத்தின் இறுதிக்கு முதல் நாள் வேட்டைத் திருவிழாவின் போது மாலை சித்திரவேலாயுதர் எழுந்தருளி கோயிலிற்குக் கிழக்கில் உள்ள தாமரைக் குளத்தருகே சூகர வேட்டைக்குச் செல்வார். சூகரத்தின் (பன்றி) வடிவினை மாவினால் செய்து, பெரிய பாத்திரத்தில் அவித்துக் குளத்தருகில் வைப்பர். சுவாமி குளத்தருகில் வந்ததும் குருக்கள் பன்றி வேட்டையாடும் வேடரைப் போற் பாவனை செய்து சூகரத்தின் உருவத்தின் மேல் வேலை எறிவார். இங்கு குருக்கள் முருகனைப் போன்று பாவனை செய்வார். பின்னர் அந்த மாவினால் செய்யப்பட்ட சூகரத்தை மஞ்சள் தெளித்த வெள்ளைச் சீலையிற் கட்டி அதனைத் தனது தலையில் வைத்துக் கொண்டு மாணிக்கத்தாள் சுவாமி முன் செல்வாள்.

சுவாமி கோயில் வாசலுக்குத் திரும்பியதும் புலவர் வாதம் நடைபெறும். அந்நிகழ்ச்சியானது செட்டியார் வள்ளி, தெய்வானையிடம் சித்திரவேலாயுதர் மீது சந்தேகம் கொள்ளும் படியான தகவலை கூறியமையால் இடம்பெறும் வாதமாக அமைகின்றது. அதில் வள்ளி, தெய்வானை அம்மையார்களின் சார்பில் குருக்களும், சுவாமி சார்பிற் பாட்டுவாளியார் ஒருவரும் வாதம் புரிவார்கள். பாட்டுவாளியாரில் மற்றொருவர் தூது பேசுவார். வள்ளி, தெய்வானையருக்கும் வேலாயுதருக்கும் இடையிலான பிணக்கு இதன் மூலம் தீர்த்து வைக்கப்படும். வாதத்தின் முடிவில் செட்டியாரே குற்றவாளி எனவும், வேலாயுதர் மீது அவர் பொய்க் குற்றச்சாட்டை வள்ளி, தெய்வானையரிடம் கூறியுள்ளமையும் நிரூபிக்கப்படும். அதற்குத் தண்டனையாக ஆலாத்திப் பெண்கள் செட்டியாரை கட்டியிழுத்துச் சென்று தூணிற் கட்டி கசையடி வழங்குவர் (கௌரி, 2012, ப.9293). 18 ஆம் நாள் சடங்கான திருச்சூகர வேட்டையாட அரசனால் மாணிக்கத்தாருக்கு வழங்கப்பட்ட கட்டளைகள் தொடர்பில் கோணேசர் கல்வெட்டுப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது. புலவர் வாதத்தின் போது இம்மாணிக்கத்தாள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவாள்.

> 'தம்பிரான் மாணிக்கம் தன்னுடைய வரிசைப்பிரதாபமுடன் வந்து அலங்கிருதப்பூம்பந்தரின் கீழே நின்று பீதாம்பரப்பட்டு முடுத்து, முத்துக்குச் சுத்தலைப்பாவுங்கட்டி, தங்க வீட்டியும் பட்டாடை சுற்றித் தன்றோளிலே வைத்துக்கொண்டு, ஆதியாகிய கோணேநாயகரையு மெழுந்தருளப்பண்ணி முன்னே போகப் பின்னே நடந்து திருச்சூகரம் நிற்குமிடத்துக்குப் போய், அவ்விடத்திலே

ஆதியாகிய கோணநாயகர் அனேக திருவிளையாடல்கள் செய்தருளிய பின்னர்த் திருச்சூகரவேட்டையாடுகிறதற்குத் தம்பிரான் மாணிக்கம் சூகரத்துக்கெதிரேவர, இருபாகை முதன்மையுமீட்டி யெடுத்துக் கொடுக்க, கனகசபைப் பண்டாரத்தார் ஈட்டி தொட்டுக் கொடுக்க, தம்பிரான் மாணிக்கம் பன்றிகுற்றுகிறது. அதன்பின்பு இராசமாணிக்கம் தனது அலங்கிருத வாட்சியத்தோடே கொண்டு போய் விழா மண்டபத்தில் ஒப்புவிக்கிறது. வணிகரையடிக்கிறது வன்னிப மாணிக்கமும் செட்டிகள் மாணிக்கமும் வரிப்பத்தாயிற் பெரிய பிள்ளைப் பண்டாரத்தார் கிளையில் மனுஷரும் மஞ்சளரைத்துக் கரைத்துக் கிடாரங்களில் வைத்த காராள மாணிக்கம் அள்ளி வன்னிபத்துக்கும் இருபாகை முதன்மைக்கும் இராயருக்கும் பண்டாரத்தாருக்கும் மற்றும் போதுமான மனுஷருக்கும் உள்மண்டபத்தினின்றும் மஞ்சணீரூற்றிவிடுவது. மீகாமன் மாணிக்கமும் கம்மாளர் மாணிக்கமும் சகலருக்கும் மஞ்சணீரூற்றிவருவது. ' (கோ.கல்:108)

இதனடிப்பவீயில் மாணிக்கத்தார் என்போர் பலர் இருந்தனர் என அறிய முடிகின்றது. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமூகப் பிரிவினரால் பரிபாலிக்கப்பட்டனர் என்பது பற்றி கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. கோணேஸ்வர கோயிலின் அழிவின் காரணமாக தற்காலத்தில் ஒருவரே காணப்படுகின்றார் எனக் கருதலாம். கோணேச கோயிலின் மரபில் காணப்பட்ட விடயம் காலப்போக்கில் வெருகல், தம்பலகாமக் கோயில்களிலும் நடைபெற்றுள்ளன என்பதை இதனூடாக அறியமுடிகின்றது.

## முடிவுரை

பெண்கள் நுண் கலைகளிலே குறிப்பாக நடனத்திலே சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாக கிழக்கிலங்கை கோயில் சம்பிரதாயங்களின் ஒரு பகுதியான இறைவன் சந்நிதியில் தம்முடைய நடனத்தை அர்ப்பணித்து வந்துள்ளதை உணரலாம். சோழர் காலம் முதலாக ஏற்பட்ட இம்முறை தற்காலம் வரை தொடர்கின்றமையை அறியமுடிகின்றது. சிறப்புப் பெற்றிருந்த தேவரடியார்களின் மரபின் வரலாற்று வளர்ச்சியின் சில எச்சங்களை திருகோணமலைக் கோயில் மரபுகளில் காணமுடிகின்றது. மாணிக்கத்தாள், ஆலாத்திப் பெண்கள் என்ற பெயரில் ஆலாத்தியெடுத்தல், சில கோயிற் பணிகளைச் செய்தல் என குறிப்பிட்டதொரு வரையரைக்குள் அடங்கிவிட்டது. இப்பெண்கள் நடனம் ஆடுகின்ற நிலையிலிருந்து மாறி கோயிற் சேவையாளர்களாக தற்காலத்தில் சேவையாற்றுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. எனினும் நடன அசைவின் எச்சங்கள் எனுமளவிற்கு கையசைவில் மாத்திரம் காணப்படுகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இலங்கைத் தமிழ் இலக்கியங்களிலும், கோயில் மரபுகளிலும் அறியப்பட்ட மாணிக்கத்தாள் திருகோணமலைப் பிராந்தியத்தில் கோயிற் பணியாளர்களாக மருவிவிட்டனர். ஆயினும் மாணிக்கத்தாள் எனும் நாமம் கொண்டு இன்று வரை அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## References

Gowry, P. (2012). *Verugalampathy Shri Chitravelayuthar Swamy Temple*. Shakthi Printers.

Irasamaanikanaar, M. (2013). *Pallavar Varalaru*. Chennai: Pavai Publication.

Murukesan, S. (2009). *Varalatril Devatasikal*. Chennai: Sangar Publication.

Paranavitana, S. (1994). A Tamil slab Inscription from Palammottai. *Epigraphia Zeylanica*, 4, 191-195. New Delhi: Asian Education Services.

Pathmanathan, S. (2006). Ilankai Thamiz chasanankal. (Part.I). Colombo: Department of Hindu Relious Cultural Affairs.

Pillai, K. K. (2002). *Thamizaka Varalaru: Makkalum Panpaadum*. Chennai: International Institute of Tamil Studies.

Sivasaamy, V. (2006). *'Devatasi', in Indu kalaikalnchiyam (Vol.8)*. Colombo: Department of Hindu Relious Cultural Affairs.

*Thampalagaamam Athi Konanayakar Kudamulukku Malar*. (2015). Thampalagamam: Athi Konanayakar Thevasthaanam.

Vadivel, E. (1993). *Konesar Kalvettu*. Colombo: Department of Hindu Relious Cultural Affairs.

Varathasundaram, V. (2009). *Thampalagaamam Athi Konanayakar Thiruthala Yaththirai*, Thampalagamam: Athi Konanayakar Thevasthaanam.